

கிருஷ்ணகிரியில் 29வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ., மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்எல்ஏ துவக்கி வைத்தனர் 57 பயனாளிகளுக்கு ரூ.38.22 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



சென்னை தலைமைச் செயலகத்தில், சிப்காட் சார்பில் நிறுவன சமூக பொறுப்புடைமை செயல்பாடுகளின் (CSR Fund) கீழ் விளையாட்டு போட்டிகளை மேம்படுத்துவதற்காகவும், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காகவும் ரூபாய் 2 கோடி நிதிக்கான காசோலையை நேற்று முன்தினம் (06.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சிப்காட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் உள்ளனர்.

### ரேஷன் கடைகளில்

# தக்காளி விற்பனைக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சென்னை, ஜூலை 8-

ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை செய்வது பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

இதுகுறித்து சென்னை, தலைமை செயலகத்தில் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னையில் 82 ரேஷன் கடைகளிலும், 27 பண்ணை பசுமை கடைகள் உள்ளிட்ட கடைகளில் தக்காளி விற்பனைசெய்யப்பட்டுவருகிறது. அதன்படி முதல்கட்டமாக சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சி பகுதிகளில் தக்காளி விற்கப்படுகிறது. அரசு ஒரு புதிய முயற்சி இதை செய்து வருகிறது.

இது பொது மக்களுக்கு எந்தளவுக்கு பயன்பெறுகிறது என்பதை பொறுத்து மற்ற ரேஷன் கடைகளிலும் விரிவுப்படுத்தப்படும். தற்போதைய சூழ்நிலையில் எந்த பிரச்சினையும் இல்லாமல், பொது மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல அகில இந்திய அளவில் தக்காளி தட்டுப்பாடு உள்ளது. ஒன்றிய அமைச்சரே அதை தெளிவுபடுத்தி உள்ளார். இந்தியாவில் பல மாநிலங்களில் உள்ளவர்கள் தொலைபேசியில், தமிழ்நாடு முதல்வர் எடுத்த நடவடிக்கையை பாராட்டுகிறார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல. மகாராஷ்டிரா உள்ளிட்ட பல மாநிலங்களில் தக்காளி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் உள்ளது. அந்த மாநில முதல்வர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், தமிழக மக்களுக்கு குறைந்த விலையில் தக்காளி கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவடிக்கையால் ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக நமது முதல்வரை வெளிமாநிலத்தில், உள்ள தமிழர்கள் பாராட்டுகிறார்கள். தமிழ்நாடு அரசு ஒதுக்கிய 82 ரேஷன் கடைகளில் தக்காளி தற்போது விற்பனை நடைபெற்று வருகிறது.

ரேஷன் கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.60க்கு விற்கப்படுகிறது. மற்ற கடைகளில் ரூ.100க்கும் மேல் விற்கப்படுகிறது. இதனால் கூடுதலான ரேஷன் கடைகளில் விற்பனை செய்ய ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. முதலில் மாநகராட்சிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து மற்ற மாநகராட்சிகளிலும் விற்பனை செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டியளித்தார்.

### ரூ.16 லட்சம் கடனை அடைக்க உதவுவதாக

# ரூ.3 கோடி சொத்தை அபகரித்த பா.ஜ.க. நிர்வாகி!

## இறந்த நண்பனின் தாய்க்கு கட்சியில் பதவி தந்து நூதன மோசடி!

வேலூர், ஜூலை 8-

இறந்த நண்பனின் தாய்க்கு கட்சியில் பதவி தந்து, அவரின் ரூ.16 லட்சம் கடனை அடைக்க உதவுவதாக ரூ.3 கோடி சொத்தை பா.ஜ.க. நிர்வாகி அபகரித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வேலூர் சத்துவாச்சாரியை சேர்ந்தவர் மீனாட்சி (74), ஓய்வு பெற்ற அரசு ஊழியர். இவர் வேலூர் எஸ்.பி. அலுவலகத்தில் நடந்த குறைதீர்வு கூட்டத்தில் மனு அளித்தார்.

அதில் கூறியிருப்பதாவது:

நான் அரசு வேலையில் இருந்தபோது சத்துவாச்சாரி பேஸ்2வில் 233.12 சதுர மீட்டர் இடத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வாங்கி, வீடு கட்டி வசித்து வந்தேன். எனது 2 மகள்கள் திருமணமாகி வெளியூர்களில் வசிக்கின்றனர். மகன் கடந்த 2005ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டான். எனது கணவர் சுப்பிரமணியம் கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் கொரோனாவால் இறந்துவிட்டார். குடும்ப செலவினங்கள், மகள்களின் நலனுக்காக தனி நபரிடம் சிறுக, சிறுக வாங்கி இருந்த கடன் தொகை, வட்டி என ரூ.16 லட்சம் கட்ட வேண்டி இருந்தது.

இந்நிலையில் கடந்த 2021ல் என் கணவர் உடல் நிலை சரியில்லாதபோது, அவரை பார்க்க வந்த எனது மகனின் நண்பன் சங்கர், திருவண்ணாமலை மாவட்ட பா.ஜ.க. நிர்வாகி சாய்பாபாவை அறிமுகம் செய்தார். அவர் என்னையும் பா.ஜ.வில் உறுப்பினராக்கி, சத்துவாச்சாரியில் பேஸ்2 பகுதியின் பா.ஜ.க. கிளை செயலாளர் பொறுப்பு வாங்கி கொடுத்தார். பின்னர், எனது ரூ.16 லட்சம் கடனை திருப்பி அடைக்க உதவுவதாக கூறி, ரூ.3 கோடி மதிப்புள்ள வீடு, கடைகள் அடங்கிய எனது சொத்தை அடமானம் வைப்பதற்கு, சிவா என்பவரை, சாய்பாபா அறிமுகம் செய்தார். கடந்த 2021ல் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது சொத்தை அடமானம் வைப்பதாக அழைத்து சென்று, என்னிடம் கையெழுத்து வாங்கி பதிவு செய்தனர்.

எனக்கு கடனாக கொடுத்த ரூ.16 லட்சத்தை திருப்பி கொடுத்தவுடன் அடமானம் ரத்து செய்யப்படும் எனக்கூறி அசல் பத்திர ஆவணங்களையும் வாங்கிக்கொண்டனர். இந்நிலையில், என்னுடைய சொத்தை மகளுக்கு பிரித்து கொடுப்பதற்காக வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து நகல்களை வாங்கி பார்த்தேன். அப்போது சங்கர், சிவா, சாய்பாபா ஆகியோர் கூட்டாக சேர்ந்து, சொத்தை சிவாவுக்கு பொது அதிகாரம் கொடுத்த ஆவணம் பதிவாகி இருப்பது தெரியவந்தது. மேலும், மறுநாளே, சிவா காஞ்சிபுரத்தை சேர்ந்த பாரதிராஜனுக்கு ரூ.45 லட்சத்துக்கு கிரையம் செய்துள்ளார். பின்னர் பாரதிராஜா சென்னையில் உள்ள வங்கி கிளையில் ரூ.84 லட்சத்துக்கு அடமானம் வைத்துள்ளது ஆவணங்கள் மூலம் தெரியவந்தது. ரூ.16 லட்சம் கடனுக்காக ரூ.3 கோடி சொத்தை ஏமாற்றிய, பா.ஜ.க. நிர்வாகி சாய்பாபா, சங்கர், சிவா, பாரதிராஜன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியிருந்தார். மனுவை பெற்றுக்கொண்ட எஸ்பி மணிவண்ணன், மனு குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தரவிட்டார்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஜூலை 8-

கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ் ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திலுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளிலும், 2023ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு பணிகள் 21.07.2023 வெள்ளி முதல் 21.08.2023 திங்கள் வரை நடைபெறவுள்ளது.

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2024ன் போது கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் அளிக்க அனுமதிக்கப்பட்ட 17.10.2023 முதல் 30.11.2023 வரை உள்ள காலத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்யவோ / திருத்தங்கள் செய்யவோ / இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் / தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கீழ்க்கண்டவாறு அளிக்கலாம்.

- அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் / வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.
- சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச்சாவடி அமைவிடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.
- அலுவலக வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் அளிக்கலாம்.
- பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகவரிச் சான்றாக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்.
- முகவரிக்கான நீர்/மின்சாரம்/எரிவாயு இணைப்பு ரசீது (குறைந்தது 1 வருடத்திற்காவது)
- ஆதார் அட்டை
- தேசியமயமாக்கப்பட்ட / அட்டைவணைப்படுத்தப்பட்ட வங்கி / அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம்.
- கடவுச் சீட்டு
- விவசாயி புத்தகம் உட்பட வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள்.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024, 01.04.2024, 01.07.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தி யடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப்படங்களை அளிக்க / தரமேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

# இந்தியாவில் ஜனநாயகம் இல்லை!

## சரத்பவார் கண்டனம்!



மும்பை, ஜூலை 8-

மும்பையில் உள்ள ஒய்பி சவான் அரங்கில் நடந்த எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சரத் பவார் பேசியதாவது:

என்னுடைய வெற்றியும் பலமும், தொண்டர்கள்தான். மாற்று அணியினர் என் படத்தை பயன்படுத்துகின்றனர். ஏனென்றால் அவர்களுடைய முகத்தை யாரும் பார்க்க மாட்டார்கள். என்னுடைய படத்தை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். எங்கள் கட்சியின் சின்னம் கடிகாரம். அது எங்கேயும் போகாது. போகவும் விடமாட்டேன். மகாராஷ்டிராவில் என்ன நடக்கிறது என்பதை நாடே கவனித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தியாவில் ஜனநாயகம் இல்லை என்றே சொல்ல வேண்டும். சாதாரண மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டுமானால் களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும். சில நாட்களுக்கு முன்பு தேசியவாத காங்கிரஸ் தலைவர்கள் சிலர் மீது பிரதமர் நரேந்திர மோடி ஊழல் புகார் கூறினார். அவர்களையே இன்று அமைச்சர்கள் ஆக்கியுள்ளார். பிரதமரின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

பிரதமர் நாட்டைத் தான் பிரதிநிதிப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட அரசியல் கட்சியை அல்ல. அஜித் பவார் மக்களை முட்டாள் ஆக்குகிறார். அவர் முறையான வழிகளை பின்பற்ற மாட்டார். பாரதிய ஜனதாவுடன் சேர்ந்தவர்களுக்கு எதிர்காலம் இல்லை. மக்களை பிளவுபடுத்த பாரதிய ஜனதா முயற்சிக்கிறது.

இவ்வாறு சரத்பவார் அவர்கள் பேசினார்.

### எதற்காகவும் மோதிக்கொள்ள மாட்டோம்!

# தமிழ்நாடு எங்களின் சகோதர மாநிலம்!

## கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் பேட்டி!



பெங்களூரு, ஜூலை 8-

தமிழ்நாடு, கர்நாடகாவின் சகோதர மாநிலம்; அவர்களுடன் எந்த விஷயத்திற்காகவும் சண்டை போட மாட்டோம் என்றும் கர்நாடக துணை முதல்வரும், அம்மாநில நீர்வளத் துறை அமைச்சருமான டி.கே. சிவகுமார் கூறியுள்ளார்.

அவர் பேட்டியில் "தமிழ்நாடு, கர்நாடகத்தின் சகோதர மாநிலம். இங்கு (கர்நாடகம்) உள்ளவர்கள் அங்கு (தமிழ்நாடு) வேலை பார்க்கிறார்கள். அதுபோல் தமிழ்நாட்டை சேர்ந்த வர்கள் கர்நாடகாவில் வேலை பார்க்கிறார்கள். எனவே எந்த ஒரு விஷயத்திற்காகவும் இரு மாநிலமும் சண்டையிடக் கூடாது. நேரம் கிடைக்கும்போது இரு மாநில அரசும் அமர்ந்து பேசி மேகதாது உள்பட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டும்.

தமிழ்நாட்டுடன் நாங்கள் எந்த விஷயத்திலும் சண்டை போடத் தயாராக இல்லை. அவர்கள் எங்களின் சகோதரர்கள். லட்சக்கணக் கான மக்கள் ஓசூர் பகுதியில் இருந்து பெங்களூருவுக்கு வந்து வேலை செய்கிறார்கள். அதனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது கண்டிப்பாக அனைவரும் அமர்ந்து பேசி பிரச்சனையைத் தீர்க்க வேண்டும்".

இவ்வாறு டி.கே.சிவகுமார் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி !

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூலை 8-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திலுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளிலும், 2023ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு பணிகள் 21.07.2023 வெள்ளி முதல் 21.08.2023 திங்கள் வரை நடைபெறவுள்ளது.

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2024ன் போது கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் அளிக்க அனுமதிக்கப்பட்ட 17.10. 2023 முதல் 30.11.2023 வரை உள்ள காலத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்யவோ / திருத்தங்கள் செய்யவோ / இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் / தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கீழ்க்கண்டவாறு அளிக்கலாம்.

- அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் / வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.
- சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச்சாவடி அமைவிடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.
- அலுவலக வேலை நாட்களில் நிர்ண யிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் அளிக்கலாம்.
- பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகவரிச் சான்றாக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்.
- முகவரிக்கான நீர்/ மின்சாரம்/எரிவாயு இணைப்பு ரசீது (குறைந்தது 1 வருடத்திற்காவது)
- ஆதார் அட்டை
- தேசியமயமாக்கப்பட்ட / அட்டைவணைப்படுத்தப்பட்ட வங்கி / அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம்.
- கடவுச் சீட்டு
- விவசாயி புத்தகம் உட்பட வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள்.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024, 01.04.2024, 01.07.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப்படங்களை அளிக்க / தரமேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.


வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு

ஜூலை 8 (2014)



தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்

1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.